# அத்துரலிய பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அத்துரலிய பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்துரலிய பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2005 திசெம்பர் 01 ஆந் திகதிய 1421/26 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அத்துரலிய பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 மே 22

கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையிலும் அக்குரஸ்ஸ பிரதேச சபை மற்றும் அத்துரலிய பிரதேச சபைகளுக்கிடையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்தளித்தல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனியார் நிறுவனத்திலிருந்து வீதிச் செப்பனிடுகையைக் கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்திலிருந்து செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினமான ரூபா 1,000,000 தொகைக்காக நாட்குறிப்பு பதிவு இலக்கம் 36 இன் மூலம் இரண்டு தடவைகள் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் செலவு வைக்கப்பட்டமையினால் அந்த அளவினால் அந்தக் கணக்கு மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கிராமிய வீதி நிகழ்ச்சித் திட்டததின் கீழ் (மகநெகும) 2012 ஆம் ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட 06 வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது பணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து அதற்காக பணம் பெறவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த வேலைகளுக்காக ரூபா 3,000,000 பெறுமதியான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் நிதியேற்பாட்டினை வழங்கி கணக்குகளின் சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,232,537 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,139,479 ஆனமையால் ரூபா 93,058 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

முன்கொண்டுவரப்பட்ட 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 97,296 தொகையான 05 பொறுப்புக் கணக்குகள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,786,458 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,428,210 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,576,953 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 888 | 812 | 429 |
| (ii) | வாடகை | 16,440 | 1,429 | 159 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,513 | 4,611 | 1,831 |

**2.2.2 ஆதனவரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 80 நுகர்வோர் இடங்களிலிருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ஆதனவரித் தொகை ரூபா 214,542 ஆகும். நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு சபைச் செயலாளரினால் முடியாதிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனவரி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 31 ஆதனவரி தாரர்களின் பெயர்கள் 2012 ஆம் ஆண்டிற்குரிய ஆதனவரி பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டில் அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 7,063 ஆக இருந்தது.

**2.2.3 வாடகை**

சபைக்குச் சொந்தமான மூன்று கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 23,870 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 253,384 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 5,743,142 தொகையும் கிடைக்கவேண்டியிருந்தது.

**2.2.5 வியாபார நிலைய அனுமதிப்பத்திரம்**

(அ) அத்துரலிய பிரதேச செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது 45 வியாபார நிலையங்களுக்குரிய வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்தலில் சலுகை வழங்கப்பட்டிருந்தது. இந்த வியாபார நிலையங்களிலிருந்து பிரதேச சபை

வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி அறவிட நடவடிக்கை எடுக்காமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 45,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 213 ஆவது பிரிவின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாத வியாபார நிலையங்களை இனங்கண்டு அதற்கு எதிராக 06 மாதத்திற்குள் வழக்குத் தொடர்ந்து உரிய கட்டணத்தை அறவிடவேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக அவ்வாறான வழக்குத் தொடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஒ) உப பிரிவின் பிரகாரம் நலன்புரி சேவைகளுக்காக அல்லது உத்தியோகத்தருக்கு ஏதாவது இடர்கள் ஏற்பட்ட போது அல்லது அவருக்கு சலுகை வழங்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட நிதியத்திற்கு சபை தீர்மானித்த தொகை வழங்க முடியுமான போதிலும் அவ்வாறு கூட்டிணைக்கப்படாத நலன்புரிச் சங்கத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 100,000 தொகை சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(i) பந்தியின் பிரகாரம் பதவியொன்றைத் தோற்றுவித்தல் மற்றும் சம்பளத்தைத் தீர்மானித்தல் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதின் கீழ் உத்தியோகத்தர்களை சபையின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும் சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற நாட்சம்பள பாதுகாவலருக்காக அவ்வாறான அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக ரூபா 182,082 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 07 ஆந் திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் வேலைக் கட்டுப்பாட்டாளர் பதவிக்காக சபைக்கு அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த

போதிலும் அதற்காக நிரந்தர ஊழியர் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 302,097 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1807/02 ஆம் இலக்க பிரதம அமைச்சரின் வர்த்தமானியின் பிரகாரம் பிரயாணச் செலவுகளைச் செலுத்துவதற்கான விதி முறைகளின் பிரகாரம் சபையினால் அல்லது பொதுமக்கள் பிரதிநிதியாக தமக்கு கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் உறுப்பினர்களுக்கு பிரயாணப் படிகளைச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு எவ்வித செயற்பாடுகளும் கையளிக்கப்படாது 22 சந்தர்ப்பங்களின் போது ரூபா 60,000 தொகை சபை உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 2012 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (மகநெகும) நிர்மாணிக்கப்பட்ட வீதி தொடர்பாக 2013 மே 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டது.

(அ) வில்பிட்ட தொடக்கம் பிட்டகொடெல்ல ஊடாக பனுகல்தெனிய வீதியை அபிவிருத்தி செய்தல் - ரூபா 551,971

- மதிப்பீட்டு விடய இலக்கம் 06 இன் பிரகாரம் வீதியின் இருபக்கமும் இடைவெளிகளுக்கு மண் போடுதல் மேற்கொள்ளப்படாதிருக்கும் போது அந்தச் செயற்பாட்டிற்காக 4.85 கன மீற்றருக்கு ரூபா 2,772 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- பொதுவாக வீதியின் இருபக்கமும் சட்டரீன் அடித்தல் ஒரே தடவையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது பகுதி பகுதியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் வீதியில் அந்தச் செயற்பாடுகள் ஒரே தடவையில் மேற்கொண்டு அதற்காக 41.76 சதுர மீற்றருக்கு ரூபா 17,414 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இம்புல்கஹஹேன வத்த வீதியை அபிவிருத்தி செய்தல் - II ஆவது கட்டம் ரூபா 500,000

- மதிப்பீட்டு விடய இலக்கம் 06 இன் பிரகாரம் வீதியின் இருபக்கமும் இடைவெளிகளுக்கு மண் போடுதல் மேற்கொள்ளப்படாதிருக்கும் போது அந்தச் செயற்பாட்டிற்காக 18 கன மீற்றருக்கு ரூபா 10,232 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- பொதுவாக வீதியின் இருபக்கமும் சட்டரீன் அடித்தல் ஒரே தடவையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது பகுதி பகுதியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் வீதியில் அந்தச் செயற்பாடுகள் ஒரே தடவையில் மேற்கொண்டு அதற்காக 34.68 சதுர மீற்றருக்கு ரூபா 10,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சியம்பலாகொடை வீதியில் அன்குன்ன கொடை வீதியின் II ஆம் கட்டம் - ரூபா 681,836

- மதிப்பீட்டு விடய இலக்கம் 09 இன் பிரகாரம் வீதியின் இருபக்கமும் இடைவெளிகளுக்கு மண் போடுதல் மேற்கொள்ளப்படாதிருக்கும் போது அந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு 54.89 கன மீற்றருக்கு ரூபா 28,645 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- பொதுவாக வீதியின் இருபக்கமும் சட்டரீன் அடித்தல் ஒரே தடவையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது பகுதி பகுதியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் வீதியில் அந்தச் செயற்பாடுகள் ஒரே தடவையில் மேற்கொண்டு அதற்காக 49.05 சதுர மீற்றருக்கு ரூபா 28,645 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிலுவைச் சம்பளமாக ரூபா 111,840 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத் தொகையை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்புச் செய்துகொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) இலங்கை மின்சார சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்திற்காக 57 வீதி விளக்குகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது பிரதேசத்தில் 374 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. இவ்வாறு வீதி விளக்கு பொருத்துதல் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு காணப்படவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்